Registered as a NewsPaper in Ceylon ★ ★ விலை: சதம் 15



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU
National Tamil Daily
தேசிய தினசரி
தபால் பெட்டி எண். 49 போன்: 389

WOLSELEY
வூல்சிலி 2"
நீர் இறைக்கும் யந்திரங்கள்
உபகரணங்களுடன்
மலிவான விலையில் கிடைக்குமிடம்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

மலர் 13 புரட்டாதி 9 ஷஃபான் 4 (25—9—71) சனிக்கிழமை இதழ் 226

## பயங்கரவாத நடவடிக்கை

# காவலில் வைக்கப்பட்டிருந்த 1600 பேர் விடுதலை!

## மேலும் 400 பேர் வெளியே வருவர்

### ஆட்சிமன்றத்தில் அமைச்சர் தகவல்

கோட்டை, வெள்ளி

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டோர்கள் என்ற குற்றச் சாட்டின் மீது கைது செய்யப்பட்டுப் பாது காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் இதுவரை ஆயிரத்து அறுநூறுபேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் நாநூறு பேர் விரைவில் விடுதலை செய்யப்பட விருக்கிறார்கள்.

இத்தகவலை ஆட்சிமன்ற விவகார அமைச்சரும் வீடமைப்புத்துறை அமைச்சருமான திரு. கே. பி. இரத்நாயக்கா இன்று ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் உப மான்யப் பிரேரணை மீது நடைபெற்ற விவாதத்தில் பேசுகையிலேயே அமைச்சர் இரத்நாயக்கா இத்தகவலை வெளியிட்டார்.

குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாதவர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட மாட்டார்கள் என்றும் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் திரு ஜே. ஆர். ஜயவர்த்தனா பேசுகையில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட எந்த அரசாங்கத்தையும் ஜனநாயகத்துக்கு விரோதமான முறையில் கவிழ்க்கஎடுக்கும் எந்த நடவடிக்கையையும் தாமகள் வன்மையாக எதிர்ப்பதாகக் கூறினார்.

பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளவர்களில் குற்றச் சாட்டு நிரூபிக்கப்படாதவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவார்களென்றுதாம் நம்புவதாகவும் திரு. ஜயவர்த்தனா கூறினார்.

---

### தெல்லிப்பழை புதிய ஆஸ்பத்திரி
## 'திறப்புவிழாவில் கலந்து கொள்ளுங்கள்'
### பொதுமக்களுக்கு எஸ். ஜே. வி. அழைப்பு

தெல்லிப்பழை புதிய ஆஸ்பத்திரித் திறப்புவிழாவில், பொதுமக்களை கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: காங்கேசன்துறை எம். பி. என்றமுறையில் நான் விடுத்த அழைப்பை ஏற்று இம்மாதம் 30-ம்தேதி மாலை 5 மணிக்கு சுகாதார அமைச்சர் திரு. ஆரியதாசா தெல்லிப்பழை புதிய ஆஸ்பத்திரியைத் திறந்துவைப்பார்.

இத்திறப்பு விழா வைபவம் எனது தலைமையில் நடைபெறவிருக்கிறது. ஆகவே பொதுமக்களை இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சுகாதார மந்திரி திரு. ஆரிய தாசா வடபகுதிக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் ... நடைபெறவுள்ளது ... நடவைபவர்கும்.

---

## உபசபாநாயகருக்கு 3 மாத லீவு

கோட்டை, வெள்ளி

உபசபாநாயகர் ஜனாப் ஐ. ஏ. காதர், அக்குரஸ்ஸ எம். பி. டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா ஆகியோருக்கு இன்று மக்கள் பிரதிநிதிகள் சபை மூன்றுமாத லீவு வழங்கியது.

---

## வாரிணிஷ் பலி 31

சென்னை, செப். 24

வாரிணிஷ் பலிகொடுத்தவர்கள் தொகை 31 ஆக உயர்ந்துள்ளது. வ சென்னையில் வாரிணிஷ் அருந்தியதால் 31பேர் இதுவரை இறந்ததாகவும் 5பேர் ஆபத்தான நிலையிலிருப்பதாகவும் 45 பேர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

---

# 12 வருடக் கடூழியம்! வவுனியா ரயில் கொள்ளை வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், சனி

வவுனியா ரயில் கொள்ளை வழக்கில் எதிரிகள் இருவருக்கும் தலா 12 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எதிரிகள் இருவரும் இரு குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளிகள் என ஜூரிசபையினர் ஏகமனதாகத் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்தர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. நீதியரசர் 1-ம் எதிரிக்கு முதலாவது குற்றச்சாட்டுக்கு 12 வருட கடூழிய சிறைத்தண்டனையும், இரண்டாவது குற்றச்சாட்டுக்கு 12 வருடக் கடூழிய சிறைத்தண்டனையும் விதித்துதண்டனை ஏககாலத்தில் நிறைவேற்றப்படுமெனத் தீர்ப்பளித்தார். மற்ற எதிரிக்கு 1-வது குற்றச்சாட்டுக்கு 12 வருட கடூழியம் 2-வது குற்றச்சாட்டுக்கு 12 வருடக் கடூழியமும் விதித்து தண்டனைகள் ஏககாலத்தில் நிறைவேற்றப்படும் என நீதியரசர் தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் 68-ம் ஆண்டு நவம்பர் 15-ம் தேதி தலைமன்னார் ரயிலில் தர்மசிறி, சிறிசேன ஆகியோர் பயங்கர ஆயுதமான கத்தி ரிவோல்வரைக் காட்டி வேலு பெஞ்சாயிடமிருந்து 600 ரூபா பெறுமதியான தாலிக்கொடியை கொள்ளையடித்ததாகவும், அதே நேரம் அதே இடத்தில் பூமாலையிடம் 50 ரூபாவை கொள்ளையடித்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புறக்டர் கே. உமைநாதன் நியமிக்கப்பட்டிருந்தார்.

---

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 364-வது சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
26 G 0432 ரூ. 77,830

இரண்டாவது பரிசு
28 G 0218 ரூ. 31,132

மூன்றாவது பரிசு
02 R 0770 ரூ. 7,783

தலா ரூ. 389-15 சதம் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 33 A 0557 | 09 B 0887 |
| 14 B 0245 | 15 B 0676 |
| 26 B 0082 | 29 B 0970 |
| 18 C 0299 | 23 C 0625 |
| 24 C 0919 | 26 C 0619 |
| 19 D 0965 | 24 D 0974 |
| 27 D 0783 | 02 E 0401 |
| 14 E 0069 | 14 E 0136 |
| 29 E 0158 | 30 E 0649 |
| 31 F 0353 | 03 G 0468 |
| 14 G 0421 | 18 G 0930 |
| 20 G 0720 | 30 G 0074 |
| 32 G 0650 | 16 H 0387 |
| 32 H 0190 | 15 J 0275 |
| 15 J 0499 | 18 J 0017 |
| 18 K 0243 | 21 K 0333 |
| 22 K 0150 | 27 K 0766 |
| 28 K 0447 | 09 L 0828 |
| 11 L 0004 | 15 L 0139 |
| 30 L 0128 | 36 L 0678 |
| 12 M 0795 | 20 M 0418 |
| 29 M 0680 | 36 M 0283 |
| 13 N 0423 | 15 N 0791 |
| 20 N 0859 | 01 O 0076 |
| 02 O 0058 | |

(6-ம் பக்கம் பார்க்க)

---


## கொழும்பில் சிறு வெள்ளம்

கோட்டை, வெள்ளி

கொழும்பில் தாழ்ந்த பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள சிறு வெள்ளம் தொடர்ந்தும் நாளையும் அதே நிலையில் இருக்குமென அறிவிக்கப்படுகிறது. சிறு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. களனியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் ...

(6-ம் பக்கம் பார்க்க)

## லிடோ [யாழ்நகர்]
(காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30)
கிங்ஸ்லி (கொழும்பு)



கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் கதை - வசனம் - டைரக்ஷனில் உருவான
ஜெமினி—வாணிஸ்ரீ — முத்துராமன்
சுந்தரராஜன் - நம்பியார்—நாகேஷ் - வாக
நடித்த
# தபால்காரன் தங்கை
உள்ளத்தைத்தொடும் 6 வதுவாரம்



## வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
# தெய்வ மகன்



சிவாஜி
[3 மாறுபட்ட வேடங்களில்]
ஜெயலலிதா
நம்பியார் — நாகேஷ்
சுந்தரராஜன்
நடித்தது.



MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m.
Sat, Sundays 10-30 a.m.
Jery Lewis
in
WHICH WAY TO THE FRONT



## வெல்லிசினிமா
மானிப்பாய்
பி. ப 2-30, 6-30, 10-00
ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ
நடித்த
கன்னிப் பெண்



REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Sat, Sunday 10-30 a.m.
Client Eastwood
in
TWO MULES FOR SISTER SARA
(Cinemascope color)

தினசரி 2-00, 9-45
எம் ஜி ஆர்-ஜெயலலிதா
நடித்த
தனிப்பிறவி
(புதியகொப்பி)



ராணி (யாழ்ப்பாணம்) எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா நடித்த
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
# அடிமைப் பெண்

ராஜா (யாழ்ப்பாணம்) கடைசி இரண்டு தினங்கள்!
தினசரி 4 காட்சிகள்
ரி. எம். சௌந்தரராஜன் நடித்த
# கல்லும் கனியாகும்


## வரி விளம்பரம்


காலம் பொருத்தமானது. ஒரு சைக்கிள் மிக்கவைத் சவலைப்பவுடரில் அநேக துணிகளை சலவைசெய்ய லாம் வெற்றுறை ஒன்றை அனுப்பி வெளியீட்டுப் புத் தகங்களைப் பெற்றுக்கொள் ளுங்கள். மின்னவைத் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பா ணம். 3520

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உலோ ணங்கள், ஒட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) என்ஜி னியரிங் வேலைகளையும் செய்து கொடுக்கப்படும். ராசா மெஷின் கொம்பனி 95. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524



## நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி 4-30 மட்டும்
சனி, ஞாயிறு 10-30
BECAUSE OF EVE

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-ஜெயலலிதா
நடித்த
கலாட்டா கல்யாணம்



### விற்பனைக்கு
சாவகச்சேரியிலிருந்து 1 1/2 மயில் கச்சாய் றோட் டில் 2 ஏக்கர் தென்னந் தோட்டம் பகுதிகளாகவோ அல்லது முழுவதும் விற்ப னைக்குண்டு. விவசாயத்திற் கும், கட்டிடத்திற்கும் உகந் தது. அருள், 25, செம்மணி வீதி, நல்லூர். 3608

மருந்துகள், மருந்துச்சரக் குகள், வாசனைப் பொருட் கள், திறம் ஊதுபத்தி, விபூதி, சாம்பிராணி, சந்தனம், குங்குமம், பன்னீர் மலிவாகக் கிடைக்குமிடம் எஸ். சுப்பிரமணியம் கம்பனி, மருந்துக்கடை கொழும்பு, யாழ்ப்பாணம் 3523

பீடாப்பாக்கும் சீவலும் தொகையாகவும் சில்லறை யாகவும் எம்மிடம் விற் பனைக்கு உள்ளது. அசோ கன்ஸ், 25, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 3605

### தேவை
நெசவு வேலைக்குப் பெண் கள் தேவை. வேலணைகிழக்கு மேற்கு சரவணை நாரந்தனை மண்கும்பான் போன்ற இட ங்களிலிருந்து தின மும் வந்துபோகக் கூடியவர் கள் நேரில் தொடர்பு கொள்ளவும். வேலணை வீவிங் இண்டஸ்றீஸ் முதலாம் வட்டாரம், வேலணை. 3610

7 1/2 வருடகாலமாக இய ங்கி வரும் பிரபலமான நடன, சங்கீத பாடசாலைக்கு, கலாஷேத்திரா முறையில் பயின்ற நடன ஆசிரியை தேவை விண்ணப்பமுடிவு திகதி 10-10-71. விளம்பர இல: 3592, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். 3592



எல்லாப் பத்திரிகைகளும் ஏகோபித்துப் பாராட்டும் ஒரே படம்!
மக்கள் மன்றம் ஏற்றுக் கொள்ளும் மகத்தான குடும்பச் சித்திரம்!!

★ தாய் என்பவள் தந்தை ஆகலாம்- தனயன் ஆகலாம் - ஆசான் ஆகலாம்- ஆண்டவன் ஆகலாம்!

★ எந்த ஒரு இடத்தையும் தாயால் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் வேறு எவராலும் தாயின் புனிதமானஇடத்தை ஈடுசெய்யவே முடியாது.



★ கடவுள் எல்லா இடத்திலும் இருக்க முடியாது என்பதால்தான் உலகில் தாயைப் படைத்தார்!

★ தாய் என்பவள் காவியம்!
இது ஒரு தாயின் கதை!!
ஆகவே இது காவியத்தின் கதை!!!





## யாழ்.வின்ஸர் வெண்திரையில்
கொட்டகை நிறைந்த காட்சிகளுடன்
காண்பிக்கப்படுகிறது
தினசரி 4 காட்சிகள்

★ ஜெமினி கணேசன் ★
★ சௌகார் ஜானகி ★
(இரு வேடங்களில்)
ரவிச்சந்திரன்-எம். ஆர். ஆர். வாசு
எஸ். வரலட்சுமி — வி. எஸ். ராகவன்
பேபி டாலி
நடித்த



# காவியத் தலைவி
கதை-வசனம் -டைரக்ஷன்:-கே. பாலச்சந்தர்

# ரூபா 300 கோடி கொடுங்கள்-கிழக்கு வங்க அகதிகளுக்கு!

## அமெரிக்க அரசை வற்புறுத்துகிறார் செனட்டர் கென்னடி

வாஷிங்டன், செப். 24

கிழக்கு வங்கத்திலிருந்து இந்தியாவுக்குள் வந்திருக்கும் அகதிகளுக்கு அமெரிக்கா 300 கோடி ரூபா உதவி வழங்கவேண்டுமெனச் செனட்டர் எட்வர்ட் கென்னடி வற்புறுத்தியுள்ளார்.

அமெரிக்க செனட்சபையில் கிழக்கு வங்க அகதிகளுக்கு அமெரிக்கா 300 கோடி ரூபா வழங்கவேண்டுமெனக் கோரும் தீர்மானம் ஒன்றை எட்வர்ட் கென்னடி தாக்கல்செய்யவிருக்கிறார்.

திரு. கென்னடி அமெரிக்க செனட்சபையின் அகதிகளுக்கான உப கமிட்டியின் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபற்றித் திரு. கென்னடி பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில், கிழக்கு வங்கப் பிரச்னையில் இன்னமும் அரசாங்கம் மௌனம் சாதித்துவருகிறது. இஸ்லாமாபாத்துடன் இவர்களுடைய உறவு இரகசியமானதாக இருக்கிறது. அமெரிக்காவின் இத்தொடர்பு எவ்விதமான முடிவுகளுக்ுச் செல்லும் என்பது விளங்கவில்லை. உலகில் இரக்கத்துக்குரியவர்களான வங்க மக்கள் மீது அமெரிக்கா இரக்கம் காட்டாதிருப்பது ஏன்? அமெரிக்க மக்களின் பண்பு எங்கே போய்விட்டது. இவர்களுடைய மௌனம் எப்பொழுதுதான் கலைப்போகிறதோ தெரியவில்லை.

கடந்த மாதம் இந்தியாவிலுள்ள அகதிகள் முகாம்களுக்கு கென்னடி விஜயஞ் செய்தபொழுது அவர்களை இந்தியாவுக்குள் துரத்தியதும், கிழக்கு வங்கத்தில் இனக்கொலை புரிவதற்கும் உதவியாக இருந்தவை அமெரிக்காவால் பாகிஸ்தானுக்குக் கொடுக்கப்பட்ட இராணுவ சாதனங்கள்தான் என்பதை உணர்ந்துகொண்டதாகத் தெரிவித்தார்.

**பொம்பிடோ ஆவல்**

கிழக்கு வங்கப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டுமானால் அங்கு அரசியல் தீர்வொன்று காணப்படவேண்டும். இதற்காக சகல தம்மாலான முயற்சிகளைச் செய்வதாகப் பிரஞ்சு அதிபர் திரு. பொம்பிடோ தெரிவித்துள்ளார்.

**அகதிகளுக்கு சர்வதேச உதவி வேண்டும்**

இந்தியாவிலிருக்கும் அகதிகளுக்கு பெருமளவில் சர்வதேச உதவிகள் வேண்டுமெனப் பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் அலக்ஸ் டக்ளஸ் ஹியூம் தெரிவித்தார். மனித சமுதாயத்தில் ஏற்பட்ட பெரும் துக்கரமான சம்பவம் இவ்வகதிகள் பிரச்னை என்று கூறிய அவர் இவ்வுதவிபற்றி அடுத்தவாரம் ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்டுடன் பேசவிருப்பதாகத் தெரிவித்தார்.

## முதலில் இளைஞருக்கு வேலை; இதற்குத் திட்டம் வேண்டும்

கொழும்பு, வெள்ளி

பயிற்சித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் பயிற்சி முடிவுற்றதும் இளைஞர்களுக்கு வேலைகள் அளிப்பதற்கு அரசாங்கம் திட்டமிடவேண்டும். இப்படிச் செய்யாத பட்சத்தில் நாம் இன்னொரு ஏப்பிரல் சம்பவத்தை எதிர்கொள்ளவேண்டி யிருக்கும்.

என்று ஆட்சி மன்றத்தில் தேசிய தொழிற் பயிற்சி மசோதா பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் திரு. ரூனி டி மெல் கூறினார்.

திரு ரூய் ராஜபக்ஷ பேசுகையில், அமைச்சர்களும் அங்கத்தவர்களும் பொதுமக்களின் கருத்துக்கு வெகுதூரத்தில் இருக்கிறார்கள். இவர்கள் இத்தகைய தங்கள் தன்மைகளை மாற்றுவிட்டால் விரைவில் எதிர்விளைவே நிகழக்கூடும் என்று கூற இந்த மசோதாவை வரவேற்று, பாடத்திட்டங்களையில் பயிற்சி அளிக்கக்கூடிய அம்சங்கள் கொண்ட சிறந்த மசோதாவொன்றை கொண்டுவருமாறு கைத்தொழில் அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

இராணுவ பொலிசார் சம்பந்தப்பட்ட நீதிமன்ற வழக்குகளை பத்திரிகைகள் பிரசுரிக்கக்கூடாதென்ற தணிக்கை அதிகாரியின் புதிய உத்தரவுபற்றி திரு பிரின்ஸ் குணசேகரா கேள்வி கேட்டார். இதற்கு பிரதமர்பதிலளிக்கையில் இவ்வித வழக்குகளை தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்று பிரசுரிக்கலாமென்று கூறினார்.

பயங்கரவாதிகள் தடுப்பு முகாமில் 6 வயது குழந்தை இருப்பதுபற்றி திரு பிரின்ஸ் குணசேகராவின் மற்றோர் கேள்வியை அமைச்சர் இரத்நாயக்கா மறுத்தார்.

இன்று ஆட்சிமன்றம்கூடிய பொழுது வட்டுக்கோட்டை எம் பி திருவாகராஜாவின் பெயரில் இருந்த கேள்விகளைக் கேட்பதற்கு திரு தியாகராசா சபையில் இருக்கவில்லை.

இறக்குமதியாகும் தமிழ்த் திரைப்படங்கள் பற்றி திரு சுமணபால சமரசேகரா கேட்ட கேள்வி ஒன்றிற்கு உதவி அமைச்சர் இரத்நாயக்கா பதிலளிக்கையில் தமிழ்த் திரைப்பட அபிவிருத்திக்கு எல்லாவிதமான உதவிகளையும் அரசாங்கம் அளிக்குமெனப் பதிலளித்தார்.

(சி-பி-ஏ)

தெல்லிப்பழையில் இன்று

## கலாநிதி வித்தியானந்தனுக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், சனி

பேராதனை இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தனுக்கு தெல்லிப்பழை அம்பனை கலைப்பெரு மன்றம் இன்று சனிக்கிழமை பாராட்டு விழா எடுக்கிறது. பல்கலைக் கழகத்தில் 25 ஆண்டுகள் பணியாற்றிவரும் பேராசிரியர் வித்தியானந்தன் இயற்றமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் ஆற்றிய சேவையைப் பாராட்டி இவ்விழா எடுக்கப்படுகிறது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் இன்று மாலை கல்லூரி அதிபர் திரு. மா. மகாதேவன் தலைமையில் நிகழும் இச் சேவைநலம் பாராட்டு விழாவில் மன்றத் தலைவர் திரு. க. விநாயகரத்தினத்தின் வரவேற்புரையைஅடுத்து சித்தாந்தசாகரம் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, கலையரசு க. சொர்ணலிங்கம், மகாஜன முன்னாள் அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் ஆகியோர் ஆசியுரை வழங்குவர். மன்றச் சார்பில் ஆசிரியர் திரு. நா. ஆறுமுகமும், தெல்லிப்பழை அம்பனை கலைக்கழக சார்பில் புலவர் நா. பார்வதி நாதசிவமும் பாராட்டு கடல் வழங்குவர். பண்டிதர் க. நசிமலாயம், கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை, கவிஞர் வி. கந்தவனம், திரு. த. சண்முகசுந்தரம் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்துவர். திரு. ஆ சிவநேசச் செல்வன் நன்றி தெரிவித்துப் பேசுவார். மன்றத்தின் 'பரிசு' என்ற நாடகமும் இடம்பெறும்.

## சமயத்திற்கும் மொழிக்கும் தொண்டாற்றியவர்

நாவடி, விசா.

பாகம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கொள்கையை வாழ்ந்து தியாக புருஷர் திரு சந்தையா. ஆசிரிய சேவைத் தகைமையொடு சென்னைச் சரிவளாசனையால் வித்துவான் என்றபட்டமும் திருப்பனந்தாள் ஆதினத்தால் சித்தாந்தப்புலவர் விருதும், சென்னை சைவசித்தாந்த சமாஜத்தால் சைவப்புலவர் பட்டமும் பெற்று தமிழ் மொழிக்கும் சைவ சமய நெறிக்கும் அருஞ்சேவை செய்த பெருமையுடையவர் அவர்" என்று கோண்டாவில் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி ஒய்வுபெற்ற, திரு வ கந்தையாவின் சேவைநலம் பாராட்டு விழாவில் தலைமையுரையாற்றிய வித்தியாலய அதிபர் திரு எஸ் நாகலிங்கம் கூறினார்.

வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தின்போது ஆசிரியர் திரு ஆ சம்பந்தருக்கும் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், சனி

பண்ணாகம் ஸ்ரீ முருகன் சனசமூகநிலையத்தில் ஏழாவது தினமாக நாளை கொண்டாடப்படும் நவராத்திரி விழாவின்போது பண்டிதர் திரு. ப. இராசகுரு சரஸ்வதி வழிபாடுபற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

வட்டுக்கோட்டையில்

## இன்று பாரதிவிழா

யாழ்ப்பாணம், சனி

இன்று மாலை வட்டுக்கோட்டை கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோவில் தெற்கு வீதியில் பாரதிவிழா கொண்டாடப்படவுள்ளது. திரு. வைரமுத்து தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசா, உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், திரு. இ. ஆர். திருச்செல்வம், திரு. வையாபுரி சண்முகதாசன், திருமதி வேதவல்லி கந்தையா, செல்வி பு. கமலவதனி, திரு. வ. பொன்னம்பலம், செல்வன் மு திருஞானசம்பந்தன் ஆகியோர் உரை நிகழ்த்துவர். விழாவின் போது கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## கி. வங்கப் படையில் கடல், விமானப்படை பிரிவு

லண்டன், செப். 24

பாகிஸ்தான் படைகளை தீவிரமாக எதிர்த்துப் போராடுவதற்காக வங்காள தேசவிடுதலைப் படையினர் கடற்படை விமானப்படைப் பிரிவுகளை அமைக்க உத்தேசித்திருப்பதாக லண்டனிலுள்ள வங்காள தேச தூதரகம் அறிவித்துள்ளது.

இதற்காக லண்டனிலுள்ள வங்காள தேசப் பிரதிநிதிகள் ஏராளமான பணம் சேர்த்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வங்காளதேச விடுதலைப்படையினர் ஏற்கனவே, பாகிஸ்தான் படைகளிடமிருந்து, கடற்படைச் சிறுகப்பல்கள் பலவற்றைக் கைப்பற்றியிருக்கின்றனர். பாகிஸ்தான் விமானப்படையிலுள்ள பல வங்காளிகள் தங்கள் பதவிகளைவிட்டு விலகிவருகிறார்கள் என்றும், இவர்கள் வங்காளதேச விமானப்படையில் சேவையாற்றலாமெனவும் இந்திய வானொலி தெரிவித்தது. ......

வட அயர்லாந்தில்

## பிரிட்டிஷ் நடவடிக்கைக்கு ஆட்சிமன்றம் பெரும் ஆதரவு

லண்டன், செப். 24

வட அயர்லாந்தில் அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டதுபற்றி பிரிட்டிஷ் ஆட்சி மன்றத்தில் விவாதம் நடைபெற்றது. இவ்விவாதத்தின் பொழுது அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு அங்கத்தவர்கள் பெரும் ஆதரவு தெரிவித்தனர். 129 அதிகப்படி வாக்குகளினால் அரசாங்கத்தின் நடவடிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்விரண்டு நாள் விவாதத்தின் இறுதியில் பிரதமர் திரு. ஹீத்பேசுகையில், வட அயர்லாந்தில்ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களும், கொலைகளும் உறுதிக்கு அதிர்ச்சியை அளித்துள்ளவென்றார்.

வடஅயர்லாந்தில் அமைதிநிலைமை ஏற்படுத்துவதற்காக மிகவிரைவில், பிரிட்டிஷ் பிரதமர், வட அயர்லாந்து பிரதமர் ஐரிஸ் குடியரசுப் பிரதமர் ஆகியோர் கூடிபேசுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பிரிட்டிஷ் பத்திரிகைகள்**

கடந்த 5 நாட்களாக வெளிவராதிருந்த பிரிட்டிஷ் பத்திரிகைகள் மீண்டும் இன்று வெளிவரத் தொடங்கியுள்ளன.

அடுத்த ஆண்டில்

## பாடசாலையில் மாணவர் அனுமதி

கோட்டை, வெள்ளி

1972-ம் ஆண்டுக்கு மாணவர்களைப் பாடசாலையில் சேர்க்கும் விண்ணப்பங்களின் முடிவு திகதி அடுத்த மாதம் 7-ம் திகதியாகும்.

அக்டோபர் 7-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டுமெனவும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்காகத் தேர்ந்தெடுக்கும் பாடசாலைகள் தங்கள் வீட்டுக்கு அருகாமையிலுள்ளதாக இருக்க வேண்டும் எனவும் கல்வி அமைச்சு வட்டாரம் தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு 2ம் வகுப்பு தொடக்கம் 8ம் வகுப்பு வரைக்கான அனுமதிகள் பெற்றோருடைய இடத்தையும் வீடு மாற்றங்களையும் கவனித்தே நடைபெறுமென்றும் ஒன்பதாம் வகுப்பிலுள்ள காலி இடங்களுக்கு மாணவர் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவர் என்றும் தெரியவருகிறது.

## கந்தபுராணப படனப் படிப்பு

யாழ்ப்பாணம், சனி

விஜயதசமியை முன்னிட்டு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இம்மாதம் 29-ம் திகதி கந்தபுராணப் படனப் படிப்பு ஆரம்பமாகி தினமும் தொடர்ந்து நடைபெறவுள்ளது. இன்று கந்தஷஷ்டி விரதத்தை முன்னிட்டு சூரசங்ஹாரமும் சூரபன்மன் வதைப் படலப் படிப்பும் நடைபெறும்.

## சாந்தானந்தஜி பஜனை

நாளை மறுதினம் திங்களன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரி விழாவில் ரிஷிகேஷ் குருமகாதேவ் சுவாமி சிவானந்தரின் சிஷ்யன் சுவாமி சாந்தானந்தஜியின் விசேஷ பஜனை, பக்திப் பாடல், சொற்பொழிவு முதலியன இடம் பெறும்.

## சித்திரக் கண்காட்சி

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறையில் விரைவில் சித்திரக்கண்காட்சி யொன்றை நடாத்துவதற்கான ஒழுங்குகளை வடமராட்சி கிழக்கும் சரியாதிகாரி திரு எம் தம்பிமுத்து மேற்கொண்டுள்ளார்

விற்பனைக்கு

ஏச்—4

விதைநெல்

தொடர்புகொள்ளவும்:-

சுந்தரம் பிறதர்ஸ்

73, மின்சாரநிலையவீதி,

யாழ்ப்பாணம்.

யாழ். பாடசாலைகள் உதைபந்தாட்டம்:

# 13 பாடசாலைக் கோஷ்டிகள் யாழ். விளையாட்டரங்கில் மோதும்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெறும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று யாழ். விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

யாழ்ப்பாண பாடசாலை உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இச்சுற்றுப் போட்டியில் 13 'ஏ' பிரிவுக் கோஷ்டிகள் கலந்து கொள்கின்றன.

முதல்நாள் போட்டியில் சென்ற வருடம் இச்சுற்றுப் போட்டியில் கூட்டுச் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட கொக்குவில் இந்துக் கல்லூரியும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

## இன்றைய ஆட்டம்

இன்று நடைபெறும் ஆட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியும், உடுப்பிட்டிக் கல்லூரியும் மோதுகின்றன.

மகாஜனக் கல்லூரி, சென்ற வருடம் இச்சுற்றுப் போட்டியில் கூட்டுச் சாம்பியனாகவும், அகில இலங்கை பாடசாலை உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட மாவட்டப் பாடசாலைகள் சாம்பியன் போட்டியில் சாம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டது. இம்முறை மகாஜனக் கல்லூரிக் கோஷ்டிக்கு வீரர் டபிள்யூ. ரவீந்திரன் தலைமை தாங்குகின்றார்.

மேற்படிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நவம்பர் மாதம் 6-ம் திகதி நடைபெறும். (தே நி)

## இவர்கள் பரிசு பெற்றனர்

யாழ்ப்பாணம் சனி

கிளிநொச்சித் தொகுதியைச் சேர்ந்த கல்லாறு அரசினர் பாடசாலை மாணவர்களின் சுற்றுலாவில் பங்குபற்றிய மாணவர்களுக்கிடையே வகுப்பு வாரியாக சுற்றுலாவைப்பற்றிய கட்டுரைப்போட்டி ஒன்று நடாத்தப்பட்டது. ஒவ்வொரு வகுப்பிலும் முதல்மூன்றிடங்களையும் பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசுபெற்றோர் விபரம் வருமாறு;

6-ம் வகுப்பு: செல்வன் வே கருணாகரன், செல்விகள்! க மீராதேவி, வே இரஞ்சிதமலர்.

7-ம் வகுப்பு: செல்வன் சி தருமபாலன், செல்வி க சித்திராதேவி, செல்வன் க லோகநாதன்.

8-ம் வகுப்பு: செல்விகள்: இ யோகேஸ்வரி, நீ இராசம்மா, செல்வன் சி தங்கவேலாயுதம்.

## "கிராமிய விளையாட்டுகளுக்கு புத்துயிரளியுங்கள்"

மாவிட்டபுரம், வெள்ளி

"இன்றைய நவீன விளையாட்டுக்கள் வளர்ந்ததால் கிராமிய விளையாட்டுக்களான தாச்சி போன்ற விளையாட்டுக்கள் அருகிவருகின்றன. வண்டை நாளில் பெரும் விளையாட்டாக இருந்த இவ்விளையாட்டுக்குப் புத்துயிரளிக்கவேண்டிய கடமை கிராம மக்களிடம் தான் தங்கியுள்ளது."

இவ்வாறு வலிகாமம் வடக்கும் காரியாதிகாரி திரு. பி. எம். பற்றிக்ஸ் மயிலிட்டி வாலிப முன்னணியின் ஆதரவில் நடந்த தாச்சி இறுதிப் போட்டியில் கலந்து வெற்றியீட்டிய கழகங்களுக்குப் பரிசில் வழங்கிப் பேசுகையில் கூறினார்.

திரு. எஸ். சின்னத்துரை தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் "கிராமங்களிடையே புதிய புதிய விளையாட்டுக்கள் அறிமுகமாகும் இன்றைய நிலையில் கிராம விளையாட்டையும் வளர்க்க இளைஞர் முன்வரவேண்டும், தமிழரின் பண்டைய கலாச்சாரத்தை எடுத்துக்காட்டும் கிராமிய விளையாட்டைச் சகலரும் கைக்கொள்ள வேண்டும்" என்றார்.

தெல்லிப்பளைக் கிராம சபைத் தலைவர் திரு எம் சிதம்பரநாதன், காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு இ குருசாமி, மயிலிட்டிக் கிராமசபைத் தலைவர் திரு கு தி இராஜதுரை உட்படப் பலர் உரையாற்றினர்.

---

குருநகர், வெள்ளி

இன்னும் ஆறுமாதகாலத்திற்குள் நல்லூர்கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் ஒரு தபால் நிலையம் திறக்கப்படுமென தபால் தந்தி அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் தெரிவித்துள்ளார்.

## இசைக் கச்சேரி

யாழ்ப்பாணம் சனி

சரசாலை இலந்தைத்திடல் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் இன்று மாலை வண்ணிசைப் புலவர் திரு. பி. ஏ. எஸ். இராஜசேகரனின் வண்ணிசைக்கச்சேரியும், சங்கீத பூஷணம் க. இ. நடராசா, திருமதி பூமணி இராஜரத்தினம் ஆகியோரின் இசை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (கு-வி-ம)

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 9-ம் திகதி (25-9-71)

மேடம்- நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம். கடமையாற்றுமிடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக்கொள்ளவும்.

இடபம்- கலஸ்திரவழியால் பொருள்வரவுக்கும் இடமேற்படும். பெரியோர்கள் ஆதரவு கிடைக்கும். கண்ணியமான தினம்.

மிதுனம்- எழுதுப்பார்வை வெட்டமிடும். கடமையில் தடைகள் ஏற்படும். முடிந்தவரையில் வழக்குவிவகாரங்களை இன்று தவிர்த்துக் கொள்ளவும்.

கடகம்- தாம்பத்திய வாழ்க்கையில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு. காதலர்களுக்கிடையில் இன்பமான சூழ்நிலை தென்படும்.

சிங்கம்- புதுமனை கட்டுவதிலும் இலாபம் கவனம் திருத்தப்படலாம். பண வரவும் உண்டு. கற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிடைக்கும்.

கன்னி- சிலருக்கு அரசினர் ஆதரவும் உண்டு. பத்திரிகையாளர்களாயின் வேதனம் உயர்த்தப்படலாம். வெளியூரிலிருந்து செய்தியும் கிடைக்கும்.

துலாம்- பூமிப்பிணக்கில் ஒரு சமரச முடிவு ஏற்படலாம். வழக்குவிவகாரங்கள் தவிர்க்கப்படும். பிள்ளைகளின் செல்வாக்கு பெருகும்.

விருச்சிகம்- பக்கத்தில் படுகுழி. பார்த்திருப்பவர் பலவர். விழிப்புடன் இருப்பின் வெற்றி உனதே.

தனு- திடீர் திருப்பம் வாழ்க்கையை வழப்படுத்தும். சிலர் வாழ்க்கை அதிர்ஷ்டகரமாக அமையும்

மகரம்- வெளியிடத்துப் பயணம் வேதனை தரலாம். வேண்டாத உறவுகளை துண்டித்தல் நன்று.

கும்பம்- இதமந்தை தொடும் சம்பவங்கள் இடம் பெறும். சிலருக்கு வாகனத்தில் முதலீடுசெய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

மீனம்- புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும். புத்திரர்களால் புகழும் கிடைக்கும். இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் அமைதி தவழும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## 'எமக்கு உதவுக'

யாழ்ப்பாணம் சனி

"நிலக்கடலை, குரக்கன், பாசிப்பயறு, உளுந்து, குரக்குவால்பயறு, பந்துப்பயறு, எள், துவரை, நாட்டுப்பயற்றம்விதை முதலியவற்றை எமது கமங்களில் உற்பத்திசெய்ய முடியும். நாம் நல்ல விதைகளைப் பெறுவதில் கஷ்டப்படுகின்றோம். தயவுசெய்து பொறுப்பான அதிகாரிகள் எமக்குத் தரமானவிதைகளை இலகுவில் பெற்றுத்தரவேண்டும்."

இவ்வாறு கூறும் மகஜரை பரந்தன் நீலிக் பயிர்ச்செய்கைக் குழு வடமாகாண விவசாய இலாகாவுக்கு அனுப்பி வைத்துள்ளது. (கு-வி-ம)

## சிரமதானம்

யாழ்ப்பாணம், சனி

மாணவமாணவிகள் சமூக சேவையில் ஈடுபட்டால் நாடு முன்னேற்றமடையும். அத்துடன் மாணவர்கள் மேற்கொள்ளும் சகல முயற்சிகளும் வெற்றியில் முடியும்.

யாழ் பெரியாஸ்பத்திரி சத்திர சிகிச்சை வைத்தியர் டாக்டர் மகேஸ்வரன் ஆஸ்பத்திரியில் சிரமதானம் மேற்கொண்ட சென் ஜோன்ஸ்மாணவர்!மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.





குளிர்மையான, மெந்தோல் பில்டர் முனை சிகரெட்டுக்கள். தற்கால நவீன புகையின்பத்திற்கு பசுமையுடன் உங்களை அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டஹோன்

CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

பாவனையாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் முக்கிய அறிவித்தல்
கடந்த இரண்டு மாதங்களுக்குப் பின்னர்
எஸ் - லோன் - பி. வி. ஸி. பைப்புகள்
விற்பனைக்கு வந்துள்ளன. உங்கள் தேவைகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.
வடமாகாண விநியோகஸ்தர்கள்

நியூ ரோன் எலெக்ரிக்கல்ஸ்

ஸ்ரான்லி றோட், போன்: 7016 யாழ்ப்பாணம்.

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகர சபை

#### அச்சடிக்கப்பட்ட படிவங்களும் றிஜிஸ்டர்களும்

1972-ம் ஆண்டுக்கான றிஜிஸ்டர்கள், லெஜர்கள், படிவங்கள் முதலியவை அச்சடித்து வழங்குவதற்கான சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 15-10-1971 நண்பகல் 12 மணிவரை என்னும் ஏற்றுக் கொள்ளப்படும். (மாதிரிப் படிவங்களை எனது காரியாலயத்தில் பார்வையிடலாம்) திருப்பிக்கொடுக்கும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 50/-ம், திருப்பப் பெறமுடியாத கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 5/-ம் செலுத்தி மதன் பேரில் கேள்விப்பத்திரங்களை 7-10-1971-ம் திகதி பிற்பகல் 3-00 மணிவரை எனக்கு மனுப்பண்ணுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் பிரதியுடன் இணைக்கப்படல் வேண்டும். மேலும் விபரங்களை காரியாலய நேரங்களில் மாநகரசபை கணக்காளரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்

ஏ. ரி. சுந்தரம்
ஆணையாளர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
22-9-1971. 3041

## மின்சார பாவனையாளர்களுக்கு அறிவித்தல்

மின்சார விநியோகப் பாதைகளில் இலங்கை மின்சார சபையினரால் அத்தியாவசிய திருத்த வேலைகள் செய்ய வேண்டியிருப்பதால் 25-9-1971-ந் திகதியிலிருந்து தொடர்ந்து 6 நாட்களுக்குக் காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிவரை 132 கே. வி. நீர் மின்சார விநியோகம் (லக்சபானா) தடைப்படும் என்பதையும் ஆனால் சுன்னாகத்தில் உள்ள டீசல் மின்சார உற்பத்தி எஞ்ஜின்கள் மூலமாக மின்சார விநியோகம் கொடுப்பதற்கு மின்சார சபை இயன்ற முயற்சிகளை மேற்கொண்டுள்ள தென்பதையும் மின்சார பாவனையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

ஆகவே மேற்குறிப்பிட்ட தினங்களில் மின்சாரத்தை இயன்றளவு கட்டுப்படுத்தி பாவிக்கும்படி பாவனையாளர்களுக்கு இத்தால் வேண்டுகோள் விடுக்கிறோம்.

(ஒப்பம்) ஏ. ரி. சுந்தரம்
மாநகரசபை ஆணையாளர்,
மின்சார இலாகா,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்
24-9-1971 3047

## மரண அறிவித்தல்

### திருமதி ரேஸ்பெல் பரிபூரணம் முருகேசு

திருமதி ரேஸ்பெல் பரிபூரணம் முருகேசு காலமாகிவிட்டார். இவர் ஏழாலை தெற்கைச் சேர்ந்த V. R. முருகேசு அவர்களின் அன்பு மனைவியும், திருமதி D. V. ஞானானந்தன் மத்திய மகா வித்தியாலயம் வசாவிளான்) ஜீவகாந்தி (இரீன் ஆஸ்பத்திரி மானிப்பாய்) சுகுணகாந்தி (இங்கிலாந்து) கருணாகரகாந்தி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு D. V. ஞானானந்தம் (நெஞ்சு ஆஸ்பத்திரி அநுராதபுரம்) திருமதி திருப்பதி ஜீவகாந்தி திருமதி யோகினி சுகுணகாந்தி ஆகியோரின் அருமை மாமியாருமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று 25-ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு வைலங்காடு ஏழாலை தெற்கில் இருந்து தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர்களும் ஏற்றுக்கொள்ளவும். 3040

## "தீமையாவது செய்யாதிருப்போம்"

யாழ்ப்பாணம், சனி

"மனிதனாகப்பிறந்த நாம் பிறருக்கு நன்மை செய்ய முடியாதுபோனாலும் தீமையாவது செய்யாமல் வாழ வேண்டும். தேவி எமக்கு எப்பொழுதும் நன்மையே செய்துவருகின்றாள்" என்று திரு. இ. வேலுப்பிள்ளை மீசாலை நெல்லியடிக் கந்தசாமி கோயில் கூட்டுப்பிரார்த்தனைசபையின் வருடாந்த கூட்டத்தில் பேசியபோது கூறினார்.

"பகலிலும், இரவிலும் சக்திக்கு சிறப்பாக எந்த ஊரில் விழா எடுக்கின்றார்களோ அவ்வூர் அபிவிருத்தி அடைந்து விடும். இது உண்மை" என அவர்சொன்னார். (ஆ. வி. ம)

## மன்னார் கொலை வழக்கு: எதிரிக்கு 9 வருட கடூழியம்

யாழ்ப்பாணம், சனி

மன்னார் சின்னக்குளம் கொலைவழக்கில் எதிரிக்கு ஒன்பது வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எதிரி கைமோசக் கொலைக் குற்றத்தையும், கைமோசக் கொலைமுயற்சிக் குற்றத்தையும் ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் மன்னார் சின்னக்குளம் என்னுமிடத்தில் 19-7-70ல் ஐயம்பெருமாள் சண்முகசுந்தரம் என்பவர் முத்துசாமியைக் கொலைசெய்ததாகவும் அதே நேரம் அதேயிடத்தில் ராசநாதன் முத்தையாவைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

எதிரிக்காக அரசாங்கச் செலவில் வழக்கறிஞர் ராமநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் குமார் அரசசேகரம் ஆஜரானார்.

முதலாவது குற்றத்திற்கு 9 வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும், 2வது குற்றத்திற்கு 2 வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்துத் தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டுமென்றும் நீதியரசர் தெரிவித்தார்.

## வகுப்பு

"பட்டம்" பெற்ற திறமை அனுபவமுள்ள வீணை ஆசிரியை (சென்னை இசைப் பேராசிரியர் கல்யாண கிருஷ்ண பாகவதர் அவர்களின் சிஷ்யை) நடத்திவரும் உடுத்துறைவீணை வகுப்புகட்கு "விஜயதசமி" அன்று மேலும் சில புதிய மாணவிகள் அனுமதிக்கப்படுவர் ராஜாலயா" மண்டபம், கடைச்சாமி வீதி, நாவலர் வீதிக்கப்பால் 3611

## காணவில்லை

அட்டாளைச்சேனையைச் சேர்ந்த நாகூர்பிச்சை மகன் முனூப் 10 வயது, நிறம் கறுவல் என்பவர் 28-6-71 லிருந்து யாழ்ப்பாணம் முஸ்லீம் வட்டார நாவலர் ரோட்டிலிருந்து காணாமல் போய்விட்டார். இவரைத் தகப்பன் வந்து தேடுகிறார். இவரை வைத்திருப்பவர் "ஈழநாடு" கந்தோருக்கு அறிவிக்கவும். 3612

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 25—9—71

(செய்திகள்: காலை 6-30- பகல் 12-45 மாலை 6-00- இரவு 9-00)

294 மீ அல்லது 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இந்நிகழ் நற்சிந்தனை, 7-00 நதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை 8-00 இசைவேளை, 8-15 இன்னிசை பாடல்கள்.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 மாணவர் மன்றம், 6-30 கதைப்பாட்டு 6-45 வீட்டுவைத்தியர் 7-30 மயிலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-30 நினைவு முத்துக்கள், 8-45 நேயர் கேட்டவை, 9-30 நாடகம், 10-00 நேயர் கேட்டவை. 10-30 செய்தித் தொகுப்பு.

## மாவைக்கந்தன் வழிபடுவோர் சங்கம் தீர்மானம்

மாவிட்டபுரம், வெள்ளி

மாவிட்டபுரம்கந்தசுவாமி கோயில் சம்பந்தமாக யாழ். மாவட்ட நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம்கோர்ட்டுக்கு அப்பீல் செய்வதென்று மாவைக்கந்தன் நித்திய வழிபடு சங்கம் முடிவு செய்துள்ளது.

திரு. சி. சுந்தரலிங்கம் தலைமையில் நடந்த இச்சங்கத்தின் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. அப்பீல் தோல்வி ஏற்பட்டால் அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றியும் ஆராயப்பட்டது.

சைவ சமயத்தினரின் சமய சுதந்திரத்தை சட்டங்களைக்காட்டி அழிக்கமுயன்றால் சமயத்தின் அடிப்படை விதியான வேதசிவாகமங்களைப் புறக்கணித்துவிட்டு அரசாங்க சட்டப்படி ஆலயத்தில் கர்ப்பக்கிருகம் வரை சகலரையும் செல்ல அனுமதிக்கவேண்டும். என்றும் வழிபாடு செய்யவிரும்பும் அனைவரையும் அவரவர் இஷ்டப்படி அவரவரது மொழிகளில் வழிபாடாற்றவும் ஆலயத்திலுள் எந்த உடையுடனும் செல்ல அனுமதிப்பதென்றும், வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## பண்டாரநாயக்க ஞாபகார்த்த தின நிகழ்ச்சிகள்

கோட்டை, வெள்ளி

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த தினத்தையொட்டி நாளைஞாயிற்றுக்கிழமை குருநாகல் ஆஸ்பத்திரியில் புதிய வார்டு ஒன்றை சுகாதார அமைச்சர் டபிள்யு. பி. ஜி. ஆரியதாஸா திறந்துவைக்கவுள்ளார்.

மேலும் கலாச்சார அமைச்சு காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் வாழ்க்கை வரலாறு அவரது சேவைகள் ஆகியவற்றை விளக்கும் 15 படக்காட்சிகளையும் காண்பிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இப்படங்கள் தலைநகரிலும் நாட்டின் பலபகுதிகளிலும் காண்பிக்கப்படவுள்ளன.

அன்றைய தினம் அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும் இலாகாக்களிலும் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிடுமாறு தகவல் அமைச்சு சகல கூட்டுஸ்தாபனங்கள் இலாகாக்கள் ஆகியவற்றிற்கு அறிவித்துள்ளது.


## 30-வது மஹாஜன சம்பத சீட்டிழுப்பு

30-9-71-ந் திகதி அநுராதபுரத்தில் நடைபெறும்.

# விசேட பரிசுகள்

1-வது, 2-வது, 3-வது பரிசுபெறும் டிக்கெட்டுகளை உடையவர்களும், 200ஆறுதல் பரிசுபெறும்டிக்கெட்டுகளை உரியவர்களும் தேசிய லொத்தர் சபைக்கு ரூபா 1000/- செலுத்தி ஒரு பட்டுக் கூறைச் சாறி அல்லது ரூபா 200/-செலுத்தி ஒரு தூய பட்டு மணிப்புரி சேலையைப் பெற்றுக் கொள்ளலாம். "இவை முதல் வருபவருக்கு முதல்தருவது" என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

ரொக்கப்பரிசுபெறும் 203 டிக்கெட்டுகளுக்குடன் முன்னுக்குவரும் நான்கு டிக்கட்டுகளுக்கும் உடன் அடுத்துவரும் நான்கு டிக்கெட்டுகளுக்கும் (ரொக்கப்பரிசு பெறும் 203 டிக்கெட்டுகள் தவிர) உரியவர்கள்தேசிய லொத்தர்சபைக்கு ரூபா 65/- செலுத்தி ஒரு ஹக்கோபா இல்க் சாறி அல்லது ரூபா 60/- செலுத்தி ஒரு இறக்குமதி செய்த அச்சடி நைலெக்ஸ் சாறி அல்லது ரூபா 45/- செலுத்தி ஒரு ஆர்ட் இல்க் சாறி பரிசாகப் பெற்றுக்கொள்ளலாம். இவை "முதல் வருபவருக்கு முதல் தருவது" என்ற அடிப்படையில் வழங்கப்படும்;

பரிசு பெறும் டிக்கெட்டுகள் உட்பட, ரொக்கப்பரிசு பெறுவன உள்ளிட்டுமில 100 டிக்கெட்டுகளுக்கு உரியவர்கள் தேசிய லொத்தர்சபைக்கு ரூபா 300/-க்கு மேற்படாமல் செலுத்தி ஒரு ரகம் குறிப்பிடப்படாத கைக்கடிகாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ரொக்கப்பரிசு பெறும் 203 டிக்கெட்டுகள் உள்ளடங்கிய, 100 டிக்கெட்டுகளுக்குரியவர்களுக்கு (ரொக்கப்பரிசு பெறும் 203 டிக்கெட்டுகள், ரொக்கப்பரிசுபெறும் ஒவ்வொரு டிக்கெட்டுகளுக்கும் முதல் வரும் நான்கு டிக்கெட்டுகள், அடுத்துவரும் நான்கு டிக்கெட்டுகள் தவிர) பின்வருவனவற்றில் ஒன்றுபரிசாகக் கிடைக்கும்.

ரூபா 30/-க்கு ஒரு டக்கா கொட்டன் சாறி
ரூபா 15/-க்கு ஒரு கொட்டன் சாறி
ரூபா 20/-க்கு ஒரு சாரம்
ரூபா 18/-க்கு ஒரு சாரம்
ரூபா 42/-க்கு சால்வையுடன் ஆர்ட் இல்க் வேட்டி
ரூபா 30/-க்கு சால்வையின்றி ஆர்ட் இல்க வேட்டி
ரூபா 15/-க்கு சால்வையின்றி பருத்தி வேட்டி
ரூபா 35/-க்கு 7 யார் எகிப்தியன் கொட்டன் சூட்டிங்ஸ்

குறிப்பிட்ட அளவு கையிருப்பிலுள்ளதால் இவ்விசேஷ பாகங்கள் "முதல் வருபவருக்கு முதல் தருவது" என்ற அடிப்படையில் 1971 அக்டோபர் 14-ம்திகதி முதல் 1971 அக்டோபர் 16-ம் திகதிவரை வேலைநேரங்களில் தினசரி அடையாளச் சின்னங்கள் கொடுப்பதன் மூலம் வழங்கப்படும்; ஒருவர் ஒருநேரத்தில் ஒரு டிக்கட்டையே கையளிக்க முடியும்.

விசேட பரிசுகளுக்குரிய கோரிக்கைகள் தேசிய லொத்தர்சபையின் தலை அலுவலகங்களிலும் ஏற்றுக்கொள்ளப்படும்;

இன்றே ஒரு மஹாஜன சம்பத டிக்கெட்டை வாங்கி
ஒரு விசேட பரிசையும் பெறுங்கள்.

விசேட பரிசாகப்பெறும் பொருட்களை அவை பெறும் இடத்தில்வைத்தே பரிசீலித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். ஏதாவது சேதம் அல்லது பழுது இருப்பின் அவற்றை உடனே திருப்பிக்கொடுத்துவிடவும். எடுத்துச்செல்லப்பட்ட பொருட்கள் பின்னர் திருப்பி எம்மால் ஏற்கப்படமாட்டா. பெறுமிடத்திலிருந்து எடுத்துச் சென்றபின் பொருட்களில் ஏதாவது பழுது அல்லது சேதம் இருப்பின் அவற்றிற்கு நாம் பொறுப்பாளிகளல்ல.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

## மணிவாக்கு

நன்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும் பொழுது செய்யாதொழிவையாகில், பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது.
— நாவலர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் புரட்டாதி மாதம்
9-ந் திகதி (25-9-71)


## நினைவு தினம்

திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா மறைந்து நாளையுடன் பதிரெண்டுகளாகின்றன. அவர் மறைந்தாலும் அவரது பெரும் சேவையும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றும் வாழும் என்றும் நம்பலாம்.

அமரர் பண்டாரநாயகா இலங்கையின் அரசியலில் புதியதிருப்பத்தை ஏற்படுத்தியவர். உள்நாட்டிலும் வெளிநாட்டுக் கொள்கையிலும் தனி பெருவழியை உருவாக்கியவர். இந்நாட்டு மக்களுக்கு உண்மையான விடுதலையை தேடிக்கொடுக்க முனைந்தவர். ஜனநாயகத்தில் பொது மக்களுக்கும் பங்கு உண்டு என்பதை உணர்த்தி அவர்கள் பங்குபெறுவதற்கு வழிசெய்தவர். நாட்டின் பொருளாதார விடுதலைக்காகப் பல நல்ல திட்டங்களைக் கொண்டு வந்தவர். முற்போக்குவாதியான அவர் சிந்தனையாளரும் சிறந்த பேச்சாளருமாவார்.

திரு. பண்டாரநாயகா வாழ்ந்தகாலத்தில் நேரடியாக அரசியலில் பங்கு கொள்ளாமலிருந்தவர் இன்றைய பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா. ஆனால் இன்று உள்நாட்டில் எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும் என்னதான் பிரச்னைகள் தோன்றினாலும் அவற்றையெல்லாம் சமாளித்து நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டி அமைதியைப் பாதுகாத்து வீராங்கனையாகத் திகழ்கிறார் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா. உள்நாட்டுப் பிரச்னைகளைத் தீர்த்து ஜனநாயகத்தையும் பாதுகாக்கும் இன்றைய பிரதமர் வெளிநாட்டுப் பிரச்னைகளிலும் தகுந்த ஆலோசனைகள் கூறி தக்கசமயத்தில் தலையிட்டு உலக சமாதானத்தைக் காப்பதிலும் சிறந்த பணிபுரிகிறார். இப்படி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி 'வீராங்கனை' என்றும் 'சிறந்த ராஜதந்திரி' என்றும் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா பெயர் பெற்றுள்ளாரெனில் அது அமரர் பண்டாரநாயகா காட்டியவழியும் அவர் வகுத்த கொள்கையும் அவரது மனப்பான்மையை நன்கு அறிந்து வைத்திருந்த இன்றைய பிரதமரின் திறமையுமே காரணமென்று சொல்லலாம்.

'காலஞ்சென்ற பிரதமரின் கொள்கை' என்று பலரும் தமக்கு ஏற்ற வகையில் சாதகமாக்கிக் கொள்ள முனைவதுண்டு. திரு. பண்டாரநாயகா தமது கொள்கைகள் என்று எதையும் திட்டவட்டமாக வகுத்து எழுதி வைக்கவில்லை. அப்படி எழுதிவைப்பதும் சாத்தியமல்ல. காலம் மாறும் பொழுது கருத்தும் மாறுதலுக்குள்ளாகும். வெளிநாட்டிலிருந்து திரும்பியதும் திரு. பண்டாரநாயகா கொண்டிருந்த கொள்கைக்கும் பிற்காலத்தில் கடைப்பிடித்த கொள்கைக்கும் வேறுபாடிருந்தது. எனவேதான் திரு பண்டாரநாயகாவின் கொள்கையென்பதை அவரது மனப்பான்மையையும் அவர் வகுத்த அடிப்படை அம்சங்களையும் நன்கு அறிந்த திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா தான் விளக்கவோ செயல்படுத்தவோ தகுதியானவர் என்று சொல்லக் காரணமுண்டு.

அமரர் பண்டாரநாயகா ஜனநாயகத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவர். ஜனநாயகமென்பது சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறித்தெடுத்துப் பெரும்பான்மையினருக்குக் கொடுப்பதல்ல என்று சரியாக விளக்கம் கொடுத்தவர்.

அன்றிருந்த அரசியல் சூழ்நிலையில் மொழிப்பிரச்னையை முன்வைத்துத்தான் ஆட்சிபீடத்துக்குவர முடியுமென்பதை அவர் உணர்ந்திருந்தார். ஆட்சிபீடத்துக்குவந்தால்தான் முற்போக்குத் திட்டங்களைச் செயல்படுத்தலாமென்றும் நாட்டுக்கு உண்மையான விடுதலையைத் தேடிக்கொடுத்து சுபீட்சப் பாதைக்கு அதைவழி நடத்திச் செல்லலாமென்றும் அவர் கருதினார். அவர் எடுத்தது வெற்றிபெற்றது. 1956ம் ஆண்டில் ஆட்சி பீடத்தில் அவர் அமர்ந்தார். அவர் நினைத்தபடி சிலமுற்போக்குத் திட்டங்களையும் கொண்டுவந்தார்.

சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிக்க வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு இருந்ததில்லை. சிறுபான்மையினரின் நியாயமான உரிமைகளை வழங்குவதற்கு அவர் சம்மதித்து 1957ம் ஆண்டில் தமிழ் அரசுக்கட்சியினருடன் ஓர் உடன்படிக்கையும் செய்துகொண்டார். ஆனால் அவரது நோக்கம் ஈடேறுவதற்கு காலம் விடவில்லை.

திரு. பண்டாரநாயக்கா மறைந்து பதிரெண்டுகளான பின்னரும் சிறுபான்மையினர் பிரச்னை இந்த நாட்டில் தீர்ந்துவிடவில்லை. இதை இன்று பலரும் ஒப்புக்கொள்கின்றனர்.

புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. நாடு பல நெருக்கடிகளையும் சோதனைகளையும் சமாளித்து வரும் சமயம் இது. நாட்டின் முன்னேற்றம் தேசிய ஒற்றுமையில்தான் பெரிதும் தங்கியிருக்கிறது. எனவே சிறுபான்மையினர் உரிமைகளுக்கு அரசியல் அமைப்பில் உத்தரவாதம் வழங்கி அமரர் பண்டாரநாயக்காவின் வழியில் நாட்டின் பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டு நாட்டை சுபீட்சப்பாதைக்கு வழிகாட்ட இதுவே நல்லசமயம்.

# சுவாமி சாந்தானந்தா விடுக்கும் சவால்!

"சித்ரம் வடதரோர் மூலே விருத்தச் சிஷ்யா: குரோர் யுவா......" என்று குருவணக்க சுலோகமுண்டு. நல்லூர் திவ்ய ஜீவனசங்க மண்டபத்திலே மேடையிலிருந்து சுவாமி சாந்தானந்தா அவர்கள் தினசரி காலையிலும் மாலையிலும் செய்துவரும் உபதேசங்களையும், மண்டபத்தில் நாளுக்கு நாள் அதிகமான மக்கள் கூடி ஆவலுடன் அவற்றைக் கேட்டுவருவதையும் காண, மேற்குறித்த சுலோகம்தான் எனக்கு நினைவு வருகிறது.

அழகான வட ஆலமரத்தடியிலே வயதான சிஷ்யர்கள் கூடியிருப்பதாகவும், குருவோ ஒரு வாலிபராக இருப்பதாகவும் அந்த சுலோகம் கூறுகிறது. சுவாமிக்கு 34 வயதாயின், பார்த்தால் 24 வயதுள்ளவர் போலவே தோன்றுகின்றார். மண்டபத்தில் கூடியுள்ள மக்களில் பெரும்பாலோரும் அவரைவிட வயதில் மூத்தவர்கள்! கல்லூரி மாணவர்கள் பலரும் காலையில் தியான வகுப்புக்கு வந்து ஆவலுடன் கேட்டு பயனடைவதைக் காண மகிழ்ச்சியாக இருந்தது.

அந்தமண்டபத்தில் புனிதமான பக்திச் சூழ்நிலையிலே எழும் பிரார்த்தனை ஒலிகள், அங்கு ஆத்மீக சக்தியை அதிகரிக்கச்செய்கிறது. அப்படியான ஒரு மண்டபம் கட்டப்பட்ட பலனை இப்பொழுது காணக்கூடியதாக இருக்கிறது. பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்துகொள்வோர்கள் புண்ணியம் செய்தவர்கள். அவர்களது வாழ்க்கையிலே ஒரு நல்ல திருப்பம் இதனால் ஏற்படுமென்பதில் ஐயமில்லை. விசேஷ பயன் காண்பதால்தான் தினசரிகூட்டம் அதிகரிக்கிறது

### ஐயரன் எழுதுவது

0 0 0

"ஆலய வழிபாடு இந்து சமய அனுஷ்டானங்கள் முதலியவற்றை யாராவது மூடநம்பிக்கையென்று கூறினால் அதற்கு அறியாமையே காரணமாகும். இவ்விஷயமாக யாரும் கேள்வி கேட்பதாயின் அவர்களுக்கு தக்க பதில் சொல்லக்காத்திருக்கிறேன். வருக என்று சவால் விடுகிறேன்" என நேற்று முன்தினம் இரவு கேட்டார். ஒருவரும் முன்வரவில்லை. சந்தேகம் யாருக்காவது இருப்பின் அதைத் தீர்த்துக் கொள்ள இது நல்ல சந்தர்ப்பம். மதபேதங்களின்றி எல்லாச் சமய மகான்களையும் போற்றுகின்றார் அவர்.

யாழ்ப்பாணத்தில் சில கல்லூரிகளுக்குச் சென்று மாணவ மாணவிகளிடையே பேசி வருகிறார். அவரது பேச்சுக்கள் உபதேசங்களாகும். அவற்றைக் கேட்டவர்களும் அவரைப் பார்த்தவர்களும் மனதிலே புதிய நம்பிக்கையும் தெம்பும் கொண்டு சுவை. அச்சம் இவை வெகுவாக நீங்கி வாழ்க்கையை தெய்வீக வழியில் நடத்த முடிவதாக இருக்கும்.

அவரது ஆங்கிலப் பேச்சையும், நகைச்சுவையையும், யோகாசனம், முதலிய பயிற்சிகளையும், கம்பீரமான தோற்றத்தையும் கண்டு, ஓர் அன்பர் ஓர் அச்சம் தெரிவித்தார். அவரைக் கண்டால் அமெரிக்கர்கள் தங்கள் நாட்டுக்குக் கொண்டு சென்று விடுவார்களென்றும் சுவாமி சச்சிதானந்தாவை கண்டியில் கண்டு இப்படித்தான் அமெரிக்காவுக்குக் கொண்டு போய்விட்டதாகவும் சிரித்துக் கொண்டே கூறினார்.

அமெரிக்காவில் பொருள் வளமிருப்பினும், செல்லும் திசை தெரியாது வாலிபர்கள் திகைக்கிறார்கள் மயக்க மருந்துகளை அதிகம் நம்பி வாழ்கின்றார்கள். அவர்களை மீட்க சுவாமி அவர்கள் அங்கு அழைத்துச் செல்லுவதாயின் அதில் வியப்பில்லை. அவரைப் பார்க்கும் போது சுவாமி விவேகானந்தர் நினைவு வருவதாகவும் அவரது எதிர்காலம் மிகச் சிறப்பாக இருக்கப் போவதாகவும் மற்றொரு அன்பர் தெரிவிக்கிறார்.

இங்கு அவர் ஆங்கிலத்தில் செய்துவரும் பிரசங்கங்களை 'ஈழநாடு' பத்திரிகையிலே தமிழாக்கம் செய்து வெளியிட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்குமென்று ஓர் அன்பர் கடிதம் எழுதியுள்ளார். அப்பிரசங்கங்களை 'டேப்ரிக்கார்ட்' செய்திருப்பதால் வாரப் பதிப்பில் கூடிய வரை தொடர்ந்து வெளியிடலாம்.

## கவிப்...

(1ம்பக்கத்தொடர்ச்சி)

| | |
|---|---|
| 19 O 0194 | 21 O 0904 |
| 26 O 0568 | 29 O 0021 |
| 03 P 0579 | 10 P 0664 |
| 21 P 0944 | 07 Q 0680 |
| 08 Q 0832 | 12 Q 0370 |
| 17 Q 0631 | 21 Q 0584 |
| 24 Q 0812 | 29 Q 0106 |
| 05 R 0520 | 06 R 0758 |
| 10 S 0063 | 18 S 0031 |
| 04 T 0979 | 09 T 0590 |
| 31 T 0001 | 02 U 0756 |
| 10 U 0286 | 13 U 0372 |
| 12 V 0633 | 16 V 0802 |
| 17 V 0339 | 26 V 0372 |
| 29 V 0200 | 30 V 0574 |
| 01 W 0977 | 04 W 0392 |
| 07 W 0468 | 09 W 0823 |
| 07 W 0318 | 02 W 0958 |
| 12 W 0434 | 12 W 0915 |
| 30 W 0963 | 02 X 0019 |
| 18 X 0889 | 22 X 0215 |
| 30 X 0527 | 32 X 0828 |
| 34 X 0027 | 12 Y 0391 |
| 13 Y 0446 | 14 Y 0510 |
| 14 Z 0337 | 14 Z 0938 |
| 29 Z 0611 | |

## இன்று

யாழ்ப்பாணம் சனி

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் நவராத்திரி 6-ம் திருவிழாவான இன்று மாலை 6—7 மணிவரை தேவி மகாத்மியம் பிரசங்கத் தொடரில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளால் கம்பனும் கலைவாணியும் என்ற பொருள் பற்றிய பிரசங்கமும் இரவு 7 மணிக்கு அம்மன் கொலுபூசையும் நிகழும்.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இந்துக் கல்லூரியின் சாதனை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நடைபெற்ற வருடாந்த சாரணர்பாசறையில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் மூன்று முதலிடங்களையும் இரண்டு இரண்டாம் இடங்களையும் மூன்று மூன்றாம் இடங்களையும் பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர் குழு மொத்தத்தில் 54மேலதிக புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் அதற்குரியவெற்றிச் சுற்றுக் கேடயத்தையும் சுவீகரித்துக் கொண்டது.

குழுச் சாரண ஆசிரியர் திரு. என். நல்லையாவும் இதர சாரண ஆசிரியர்களான திருவாளர்கள் வி. எஸ். சுப்பிரமணியம், சி. துரைராசா, வி. சுந்தரராஜ் ஆகியோரும் மூன்று நாட்களாக நடைபெற்ற பாசறையிலும் விழாக் காட்சியிலும் தமது கல்லூரியின் வெற்றிக்கு தூண்டுகோலாய் அமைந்தவர். உதவிச் சாரண ஆசிரியர். பி. திலைநாதன், குழுத்தலைவர் என். மூர்த்தானந்தம் உதவித் தலைவர் எஸ். அமர்நாத் ஆகியோரின் கடுமையான உழைப்பும் உற்சாகமும் இப்பெருவெற்றிக்கு காரணமாகும்.

## கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்ந்த குடும்பங்கள் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளன. இவர்களுக்கு சாப்பாட்டு பார்சல்களை அரசு வழங்கியுள்ளது.

நாடெங்கிலும் கால நிலை சீர்குலைந்து வருவதால் மீனவர்களை கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாமென வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

## சுவாமி சாந்தானந்தா நிகழ்ச்சிகள்

சுவாமி சாந்தானந்தா இன்று காலை 6 முதல் 7 மணி வரையிலும் மாலையில் 6-30 முதல் 8-15 வரையிலும் யாழ்ப்பாணம் திவ்ய ஜீவனசங்க மண்டபத்தில் பஜனையும், பிரசங்கமும் செய்கிறார். நாளை 26ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் ஸ்ரீ சத்யசாயிபாபா சங்கத்தின் ஆதரவில் பேசுகின்றார்: 27ந் திகதி திங்கட்கிழமை 10 முதல் 11 மணி வரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில். மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு விமான மூலம் கொழும்புக்குப் பிரயாணமாகிறார்.

கொடிகாமத்தில்

## இன்று கலைவிழா

யாழ்ப்பாணம், சனி

கொடிகாமம் இராமநாதன் கழகத்தின் 2-வது ஆண்டு முத்தமிழ் கலைவிழா இன்று மாலை பண்டிதர் வித்துவான் பொ. கந்தையாபிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கிறது.

கொடிகாமத்தில் நடைபெறும் இவ் விழாவில் முன்னாள் மாவட்ட நீதிபதி திரு செ. தனபாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திரு த. திருநாவுக்கரசு, அ. ரவி புவனேஸ்வரன் ஆகியோர் சிறப்புரை வழங்குவார்கள். கழகத் தலைவர் திரு சி. இ. சி. சிவராமலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

இசைக்கச்சேரி, நாதஸ்வரக்கச்சேரி, மெல்லிசை வில்லுப்பாட்டு, நடனம், நாடகங்கள் உட்பட பல கலைநிகழ்ச்சிகள் இவ் விழாவில் இடம்பெறும்.